सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

**கலை, பண்பாட்டுத்துறை**

# அரசு கிளை நூலகம்

சேதராப்பட்டு. புதுச்சேரி.

அன்புடையீர் !

நிகழும் 2024ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் புதுச்சேரி, சேதராப்பட்டில் **“புதுப்பிக்கப்பட்ட அரசு கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா”** நடைபெறவுள்ளது.

மாண்புமிகு கலை, பண்பாடு மற்றும் குடிமைப்பொருள் வழங்கல்
மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர்
திரு. **P.R.N. திருமுருகன்,** அவர்கள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர்
திரு. **AK. சாய் ஜெ சரவணன் குமார்,** அவர்கள்

மற்றும்

அரசுச் செயலர் (கலை, பண்பாடு)
திரு. **அ. நெடுஞ்செழியன்,** இ.ஆ.ப அவர்கள்
ஆகியோர் முன்னிலையில் திறக்கப்படவுள்ளது.

**இந்நூலகத்தில் கீழ்க்கண்ட பிரிவுகள் மற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :**



(அ) வேலை வாய்ப்பு வழிகாட்டிப் புத்தகங்களுக்கானப் பிரிவு (Career guidance)
(ஆ) வலைதள உலாவுதல் பிரிவு (Internet Browsing Section)
(இ) பெண்கள் படிப்பதற்கானப் புத்தகங்கள்
(ஈ) சிறுவர் பிரிவு (புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்)
(உ) வாசகர்கள் குறிப்பெடுப்பதற்கானப் புத்தகங்கள். பாடப் புத்தகங்கள். நாவல்கள் மற்றும் சிறுகதைப் புத்தகங்கள் உள்ளன.
(ஊ) கணினி வாயிலாகப் போட்டித் தேர்வு புத்தகங்கள் மற்றும் அனைத்து வகையான புத்தகங்களையும் படிக்கும் வசதி உள்ளது (Digital Library).
(எ) இந்நூலகத்தில் உறுப்பினராகும் பட்சத்தில் புத்தகங்களை (குறிப்பெடுக்கும் புத்தகங்களைத் தவிர) வீட்டிற்கும் எடுத்துச்சென்று படிக்கலாம்.

இவ்வாறு பல்வேறு வசதிகளையுடைய, உங்கள் அருகில் உள்ள இந்நூலகத்தைப் பொதுமக்கள், பெண்கள், சிறுவர்-சிறுமியர், மாணவர்-மாணவியர் மற்றும் இளைஞர்கள் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றமடையவும், வேலை வாய்ப்புப் பெறவும், கலை, பண்பாட்டுத்துறையின் சார்பாக வேண்டிக்கொள்வதுடன் மேற்படி விழாவில் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



இவண்.
**வி. கலியபெருமாள்**
இயக்குநர்
(கலை, பண்பாட்டுத்துறை), புதுச்சேரி

நூலக நேரம் : செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை
காலை 09.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை
மாலை 03.30 மணி முதல் இரவு 06.30 மணி வரை
ஞாயிற்றுக்கிழமை
காலை 09.00 மணி முதல் நண்பகல் 01.00 மணி வரை
பிரதி திங்கட்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாட்களில் நூலகம் இயங்காது.